பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*02 05 2026 SATURDAY 12 40 PM*

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மேற்குவங்கத்தில், 2 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு உட்பட்ட 15 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு தற்போது அமைதியாக நடைபெற்று வருகிறது.

2. வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை உயர்வுக்கு சர்வதேச அளவில் நிலவும் சூழலே காரணம் என்று மத்திய அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

3. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் சார்பில் நாடுமுழுவதும் முன்னெச்சரிக்கை தகவல்களை அனுப்புவதற்கான ஒத்திகை இன்று நடைபெறுகிறது.

4. மஹாராஷ்ட்ராவில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன. 81 புள்ளி ஏழு எட்டு சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

5. Luxembourg ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Meghana Reddy காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

மேற்குவங்கத்தில், 2 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு உட்பட்ட 15 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு தற்போது அமைதியாக நடைபெற்று வருகிறது.

Magrahat Paschim சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட 11 வாக்குச்சாவடிகளிலும் Diamond Harbour சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட 4 வாக்குச்சாவடிகளிலும் காலை 7 மணிக்கு தொடங்கிய இந்த மறுவாக்குப் பதிவு, மாலை 6 மணிவரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தமிழகம், கேரளம், மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல்களில் பதிவான வாக்குகள், நாளை மறுநாள் எண்ணப்படுகின்றன.

இதற்கிடையே, மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலில் வாக்கு எண்ணும் பணிகள் குறித்து, திரிணமுல் காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, மற்றும் அக்கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் திரு. அபிஷேக் பானர்ஜி ஆகியோர் காணொலி வாயிலாக அக்கட்சி நிர்வாகிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

*திரிணாமுல் காங்கிரஸ் கட்சி போட்டியிடும், 291 சட்டப்பேரவை தொகுதிகளின் வாக்கு எண்ணும் பணிக்கான அக்கட்சியின் முகவர்கள் இதில் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>><<<<<<*

*மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணும் பணிக்கான கண்காணிப்பாளர்களாக மத்திய அரசு ஊழியர்களை தேர்தல் ஆணையம் நியமித்த விவகாரத்தில் தலையிட முடியாது என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.*

*இதுதொடர்பாக, திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தாக்கல் செய்த மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. நரசிம்மா, திரு. Joymalya Bagchi அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.*

*அதிகாரிகளை தேர்ந்தெடுப்பதற்கான உரிமை தேர்தல் ஆணையத்திற்கு உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*வாக்கு எண்ணும் பணிக்கான அனைத்து நெறிமுறைகளும் முழுமையாக பின்பற்றப்பட வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை உயர்வுக்கு சர்வதேச அளவில் நிலவும் சூழலே காரணம் என்று மத்திய அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மெற்காசியாவில் நிலவும் சூழல் காரணமாக, சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டினார்.*

*இதன் காரணமாகத் தான் வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலையை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*இருப்பினும், பெட்ரோல் டீசல் மற்றும் வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு விலை உயர்த்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.*

பெட்ரோலியப் பொருட்களின் விநியோகம் தடையின்றி நடைபெறுவதையும் மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் சார்பில் நாடுமுழுவதும் முன்னெச்சரிக்கை தகவல்களை அனுப்புவதற்கான ஒத்திகை இன்று நடைபெறுகிறது.

இதுதொடர்பான குறுந்தகவல் பெறப்பட்டால் பொதுமக்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை என்று தொலைத்தொடர்பு துறை கேட்டுக் கொண்டுள்ளது.

பேரிடர் காலங்களில், கைபேசி மூலம் தகவல்களை வழங்குவதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு, பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாக வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

ஒடிசாவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பேசிய அவர், அம்மாநிலத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை பட்டியலிட்டார்.

மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதன் காரணமாக, ஒடிசா விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>>><<<<<<

பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக, அத்துறைக்கான அமைச்சர் திரு. Jual Oram கூறியுள்ளார்.

ஹரித்வாரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பழங்குடியினரின் மேம்பாட்டில் பிரதமர் தனிக்கவனம் செலுத்தி வருவதாக கூறினார்.

>>>>>><<<<<<

ஆந்திராவின் வளர்ச்சிக்காக மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து பணியாற்றி வருவதாக சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

ஸ்ரீகாகுளம் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மீனவர்கள் வசிக்கும் கிராமங்களில் சூரியமின்சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முதல்கட்டமாக 100 கிராமங்களில், ஆயிரத்து 400 இத்தகைய விளக்குகள் நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மத்திய மாநில அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, வேலைவாய்ப்பும் அதிகரித்துள்ளதாக திரு. ராம்மோகன் நாயுடு கூறினார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. Ajay Rai, உடல்நலக்குறைவு காரணமாக, லக்னோவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ராவில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

81 புள்ளி ஏழு எட்டு சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

வழக்கம்போல், மாணவர்களைவிட மாணவிகளே அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாணவிகளின் தேர்ச்சி விகிதம் 93 புள்ளி ஒன்று ஐந்து சதவீதமாகவும், மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 86 புள்ளி எட்டு பூஜ்யம் சதவீதமாக உள்ளது.

>>>>>><<<<<<

கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக மியான்மர் புறப்பட்டுச் சென்றார்.

இருநாடுகளுக்கு இடையேயான கடற்படை ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அதிகாரிகளுடன் விவாதிக்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

தெலங்கானா அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி உறுதியளித்துள்ளார்.

ஹைதராபாதில், தம்மை சந்தித்த அரசு போக்குவரத்துக் கழக ஊழியர் சங்க பிரதிநிதிகளிடம் அவர் இதனை தெரிவித்ததாக தெலங்கானா அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களை. அரசு ஊழியர்களாக இணைப்பது தொடர்பான செயல்திட்டத்தை சமர்ப்பிக்குமாறு முதலமைச்சர் அவர்களிடம் அறிவுறுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கர்நாடகாவில் முதலமைச்சர் மாற்றம் தொடர்பாக, காங்கிரஸ் கட்சியின் தலைமை தான் உரிய முடிவை மேற்கொள்ளும் என்று அம்மாநில உள்துறை அமைச்சர் திரு. பரமேஸ்வரா கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கருத்து தெரிவித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், முதலமைச்சரை மாற்றுவது தொடர்பான எந்தவொரு முடிவையும் காங்கிரஸ் தலைமை தான் மேற்கொள்ளும் என்று திரு. பரமேஸ்வரா தெளிவுபடுத்தினார்.

>>>>>><<<<<<

மழை வெள்ள பாதிப்புகளை தடுப்பது தொடர்பான, இந்தியா - நேபாளம் இடையேயான ஆலோசனைக் கூட்டம் இன்று காத்மண்டுவில் நடைபெற்றது.

பீகார் அரசின் நீர்வளத்துறை முதன்மை செயலர் திரு. சந்தோஷ்குமார் மால் தலைமையிலான இந்தியக் குழுவினர் இதில் பங்கேற்றனர்.

முன்னதாக, கடந்த இரண்டு நாட்களாக இதுதொடர்பாக நடைபெற்ற பேச்சுக்களில், இருதரப்பினருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<

*ஜம்மு கஷ்மீரில் பாலம் இடிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந்தனர்,*

*Bantalab பகுதியில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்த பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில், இடிபாடுகளுக்கு இடையில் சிக்கிய மூவரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக ஜம்மு கஷ்மீர் அரசு கூறியுள்ளது.*

*ஒருவர் பலத்த காயத்துடன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகவும், அப்பகுதியில் மீட்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>><<<<<<*

*மணிப்பூரில் தீவிரவாதிகளின் முகாம்கள் பாதுகாப்பு படையினரால் அழிக்கப்பட்டன.*

*Tengnoupal மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த போது, இந்த முகாம்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*அப்பகுதியிலிருந்து ஏராளமான வெடிபொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக அவர்கள் கூறினர்.*

*>>>>>><<<<<<*

*கால்நடை மருத்துவம், மருத்துவ தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இரண்டு ஒப்பந்தங்களில் சீனாவும், பாகிஸ்தானும், கையெழுத்திட்டுள்ளன.*

*இஸ்லாமாபாதில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாகிஸ்தான் அதிபர் திரு. Asif Ali Zardari முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*Luxembourg ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Meghana Reddy காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 16-21, 21-14, 21-18 என்ற செட்கணக்கில் ஆஸ்திரியாவின் Xu Wei-ஐ வென்றார்.*

*>>>>>><<<<<<*

டென்மார்க்கில் நடைபெற்று வரும் தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஃபிரான்ஸை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<<

உலக ஜூனியர் பளு தூக்கும் சாம்பியன் போட்டி, எகிப்தின் Ismailia-வில் இன்று தொடங்குகிறது.

50 நாடுகளைச் சேர்ந்த 250-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<<<

உலக தொடர் ஓட்ட சாம்பியன் போட்டி, Botswana-வின் Gaporone-யில் இன்று தொடங்குகிறது.

40 நாடுகளைச் சேர்ந்த 720 பேர் இதில் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் சார்பில் Animesh Kujur, Ragul Kumar, Tamilarasu Senthilkumar, Thamana உட்பட 21 பேர் இப்போட்டியின் ஐந்து பிரிவுகளில் பங்கேற்கின்றனர்.

***>>>>>>END<<<<<<<***